# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:09** **தேதி:-14.12.2014**

# மத்திய சங்க செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

**10.12.2014 அன்று புதுடெல்லியில் கூடிய SPORTS BOARD கூட்டத்தில் கீழ்கண்ட முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:-**

i) அகில இந்திய அளவிலான போட்டிகளுக்கான KIT ALLOWANCE என்பதை ரூ.2,000/-லிருந்து ரூ.2,500/- ஆகவும், தேசிய விளையாட்டு போட்டிகளுக்கு அது ரூ.2,500/-லிருந்து ரூ.3,000/- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளன.
ii) மாநிலங்களிலிருந்தும், தொழிற்சங்கங்களிலிருந்தும் வரும் தகவல்களை வைத்துக் கொண்டு போட்டிகளின் எண்ணிக்கையை தற்போதுள்ள 7லிருந்து 12 ஆக உயர்த்தப்படும்.
iii) பல்வேறு மாநிலங்களிலிருந்தும், தொழிற்சங்கங்களிடமிருந்தும் SPORTS RECRUITMENT தொடர்பாக தகவல்கள் பெறப்படும். Group C கேடர்களில் விதிகளின் படி ஆளெடுக்கப்படும்.
iv) தேசிய விளையாட்டு போட்டிகளைல் முதல் மூன்று இடங்களை பெறுபவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும்.
v) அகில இந்திய கிரிக்கெட் போட்டி T20 முறையில் நடத்தப்படும்.
vi) அகில இந்திய போட்டிகளிலேயே தேசிய விளையாட்டு வீரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.
vii) தகுதிப் பட்டியலின் படி தொழில்நுட்ப சார்பாளர்கள் அனுப்பப்படுவார்கள்.

**இந்தக் கூட்டத்தின் முடிவின் அடிப்படையில் நமது மத்திய சங்கம் நிர்வாகத்திற்கு கீழ்கண்ட ஆலோசனைகளை வழங்கியுள்ளது.**

i) தனி நபர் போட்டி மற்றும் குழுப்போட்டி ஆகிய இரண்டு விளையாட்டு வீரர்களும் SPORTS QUOTA அடிப்படையில் BSNLல் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஓரிரு விளையாட்டு வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் கூட பல மாநிலங்களில் பல குழுப் போட்டிகளில் நமது குழுவின் தன்மை பன்மடங்கு மேம்படும். BSNL நிறுவனம் எந்தெந்த சம்மேளனங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதோ அந்த போட்டிகளுக்கான வீரர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும்.

ii) மாநிலங்களில் இருந்து பங்கு பெறும் அகில இந்திய போட்டிகளின் எண்ணிக்கை தற்போதுள்ள 7லிருந்து 12 ஆக உயர்த்தப்பட வேண்டும். தேசிய அளவில் BSNL நிறுவனம் 12 போட்டிகளுக்கு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதின் அடிப்படையில் இந்த

அனைத்து போட்டிகளிலும் அகில இந்திய போட்டிகளில் பங்கேற்க மாநிலங்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.

**மத்திய சங்கம் நிர்வாகத்திற்கு கொடுத்த கடிதங்களில் சில:-**

31ஆவது தேசிய கவுன்சில் கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால் அதில் சில திருத்தங்கள் உள்ளன என்பதை சுட்டிக்காட்டி நமது மத்திய சங்கம் கடிதம் கொடுத்துள்ளது.

25.09.2014 அன்று நடைபெற்ற 31ஆவது தேசிய கவுன்சில் கூட்டத்தில் LIC நிறுவனத்துடன் விவாதித்து ஊழியர்களின் குழுக் காப்பீட்டுத் திட்டத்தின் (BSNL GSLI) தொகையினை உயர்த்துவது என்ற முடிவினை அமுலாக்கும் படி மத்திய சங்கம் நிர்வாகத்திற்கு கடிதம் கொடுத்துள்ளது.

தொழிற்சங்க நிர்வாகிகளுக்கு வழங்கப்படும் IMMUNITY TRANSFER பிரச்சனையில் அதிகாரிகளின் சங்க நிர்வாகிகளுக்கு 3 வருடம் என்றும், ஊழியர் சங்க பிரதிநிதிகளுக்கு ஒரு வருடம் என்று உத்தரவுகள் உள்ளன. தற்போது ஊழியர் சங்கங்களுக்கும் அங்கீகார காலம் 3 ஆண்டுகள் என்று வந்த சூழ்நிலையில் ஊழியர் சங்க பிரதிநிதிகளுக்கும் அதனை மூன்று ஆண்டுகளாக மாற்ற வேண்டும் என்பதே ஊழியர் தரப்பின் கோரிக்கை. அதைப் பற்றி விவாதித்த 31 ஆவது தேசியக் குழு கூட்டத்தில் நிர்வாகம் இது தொடர்பாக மறு பரிசீலனை செய்யும் என்று கூறப்பட்டது. இது வரை அதற்கான உத்தரவுகள் வராத சூழ்நிலையில் மத்திய சங்கம் நினைவூட்டி ஒரு கடிதம் எழுதியுள்ளது.

**01.08.2014க்கு பின் பணியில் சேர்ந்தவர்கள் BSNL GSLIதிட்டத்தில் இணைய முடியாது:-**
தொலை தொடர்பு துறைக்கென்று TRAI இருப்பதை போல காப்பீட்டுத் துறைக்கென்று IRDA எனும் ஒழுங்கு முறை ஆணையம் என்ற பெயரில் ஒரு அமைப்பு உள்ளது. அதுவும் TRAIஐ போல தனியார் ஆதரவு கொள்கைளை அமுல்படுத்தக் கூடிய அமைப்புதான். அந்த அமைப்பு ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC) நிறுவனம் குழுக் காப்பீட்டு திட்டங்களை அமுலாக்கக் கூடாது என்று உத்தரவிட்டதின் அடிப்படையில் நமது BSNL GSLI திட்டத்தில் 31.07.2014க்கு பின் வந்தவர்கள் சேர முடியாது என்கின்ற நிலை உருவாகி உள்ளது. கார்ப்பரேட் அலுவலகம் 31.07.2014க்கு பின் பணியில் சேர்ந்தவர்களுக்கு இதற்கான பணத்தை பிடிக்க வேண்டாம் என உத்தரவிட்டுள்ளது.

**அபராதம்:-**
தொலை தொடர்பு நிறுவனங்கள் சந்தாதரர் சரிபார்ப்பை முழுமையாக செய்ய வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் அவர்களுக்கு அபராதம் போடப்படும் என்றும் அரசாங்கம் கூறியிருந்தது. 2014 செப்டம்பர் வரை தொலைத்தொடர்பு அமைச்சகம் 2,179 கோடி ரூபாய்களை அபராதமாக போட்டுள்ளது. இதில் BSNL நிறுவனம் 329 கோடி ரூபாய்களை

செலுத்த வேண்டும். AIRCELL நிறுவனம் அதிகபட்சமாக 486 கோடி ரூபாய்களும், RELIANCE 454 கோடி ரூபாய்களும், AIRTEL 309 கோடி ரூபாய்களும், VODOFONE 211 கோடி ரூபாய்களும், IDEAவிற்கு 123 கோடி ரூபாய்களும், TATAவிற்கு 172 கோடி ரூபாய்களும், SISTEMA நிறுவனத்திர்கு 523 கோடி ரூபாய்களும் மற்றும் TELEWINGS எனும் நிறுவனத்திற்கும் விதிமீறல்களுக்காக 116 கோடி ரூபாய்களும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

**ERP திட்டம் தொடர்பாக அகில் இந்திய மட்டத்தில் நடைபெற்ற விவாதம்:-**

கார்ப்பரேட் அலுவலகத்தில் ERP பொதுமேலாளராக உள்ள திரு ராமன் அகர்வால் அவர்களை நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் உதவி பொது செயலாளர்கள் தோழர் ஜான் வர்கீஸ் ஆகியோர் சந்தித்து ERP அமுலாக்கத்தின்போது பல்வேறு மாநிலங்களில் ஊழியர்கள் சந்திக்கும் பிரச்சனைகள் தொடர்பாக விவாதித்தனர். ERP முதலில் அமுலாக்கப்பட்ட மாநிலங்கள் சந்தித்த பிரச்சனைகளை நிர்வாகம் புரிந்துக் கொண்டு அதே பிரச்சனைகள் அடுத்து அமுலாகும் மாநிலங்களில் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என நமது தலைவர்கள் நிர்வாகத்திடம் தெரிவித்தனர். இதற்கு தேவையானவற்றை செய்ய பொது மேலாளர் உறுதி அளித்தார். இந்த மாதத்தில் ERP திட்டம் தமிழ்நாடு, கேரளா, சட்டிஸ்கர், மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் அமுலாக்கப்படும் என்றும், அடுத்த மாதம் உபி(கிழக்கு), உபி(மேற்கு), ஒடிசா மற்ரும் மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அமுலாக்கப்படும் என்றும் விவாதத்தினிடையே பொது மேலாளர் தெரிவித்தார். ERP திட்டம் தொடர்பாக ERP பிரிவு, தொழிற்சங்க தலைவர்களுக்கு ஒரு விரிவான விளக்கம் தர வேண்டும் என்று நமது தலைவர்கள் கேட்டதிற்கு அதனை உடனடியாக செய்ய அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்.**